# இளங்குற்ற நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் சமூக குடித்தொகை, தனிநபர் சார்ந்த காரணிகளும் விளைவுகளும்: அச்சுவேலி சான்றுபெற்ற பாடசாலையை அடிப்படையாக கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு

கேசவமூர்த்தி விகாஸ்[1], ராமசாமி விஜயகுமார்[2], கணேசமூர்த்தி யதுசன்[3],

[1,2 & 3] *நான்காம் வருடம், சமூகவியல் துறை, யாழ்ப்பாண பல்கலைகழகம்*
vigarshk0@gmail.com

## ஆய்வு சுருக்கம்

மாறிவருகின்ற சமூக சூழலில் இளங்குற்ற நடத்தை முக்கிய சமூக பிரச்சினையாக அமைந்துள்ளது. 18 வயதிற்குற்பட்ட சிறுவர்களால் சமூகத்தினுடைய விழுமியங்களுக்கும், சமூகத்தினுடைய கூறுகளின் செயற்பாட்டிற்கும் பாதிப்புகள் ஏற்படுத்தப்படும் போது இச்சிறுவர்களின் நடத்தை இளங்குற்ற நடத்தையாக அடையாளப்படுத்தப்படுகின்றது (Unicef,2019). இளங்குற்றவாளியாக சிறுவர்கள் நிலைமாற்றமடைவதனை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் குடும்ப கட்டமைப்பு தொடக்கம் அரசாங்கம் வரையிலான நிறுவன ரீதியான செயற்பாடுகளும் அவசியமாகின்றது. இலங்கையில் காணப்படும் ஒரேயோரு தமிழ் மொழிமூல சான்று பெற்ற பாடசாலையான அச்சுவேலி சான்று பெற்ற பாடசாலை சிறுவர்களின் நன்நடத்தை பாடசாலையாகவும் மீள்சமூகமயமாக்கலுக்கான தளத்திளை உருவாக்குவதாகவும் காணப்படுகின்றது.அந்த வகையில் அச்சுவெலி சான்று பெற்ற பாடசாலையில் மீள்சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களின் குற்ற நடத்தைக்கான சமூககுடித்தொகை காரணிகளும், விளைவுகளும் எனும் இவ்வாய்வானது கணியம் மற்றும் பண்புசார் ஆய்வு நுட்ப முறைகள் சேர்ந்த கலப்பு முறை ஆய்வாக அமைந்துள்ளது. கணியம்சார் தரவுகள் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலமாகவும் பண்புசார் தரவுகள் விடய ஆய்வு, ஆழமான நேர்காணல், நேரடி அவதானம் ஆகியவற்றுடன் நூல்கள், சஞ்சிகைகள், அரசாங்க அறிக்கைகள், இணைய கோப்புகள் மூலமாக இரண்டாம்நிலை தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட கணியம் சார் தரவுகள் சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கான தரவு மென்பொதி(SPSS) ஊடகாகவும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வு மூலமாகவும் பகுப்பாய்வு மேற்க்கொள்ளப்பட்டு ஆய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.இளங்குற்ற நடத்தைக்கான முக்கிய காரணிகளாக குடும்பங்களில் சிறுவர்களுக்கு கிடைக்கும் அன்பு மற்றும் கரிசணை, சிறுவர்களினுடைய நண்பர்களினால் தவறாக வழிநடத்தப்படல் மற்றும் குற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான அழுத்தம், ஊடகங்களினால் கவரப்படல் மற்றும் சமூக ரீதியாக எல்லைப்படுத்தல் போன்றவை இளங்குற்ற நடத்தைக்கான பிரதான காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன் இளங்குற்ற நடத்தையினால் ஏற்படும் விளைவுகள் எனும் போது போதைப்பொருள் பாவணை, குடும்பம் மற்றும் சமூகத்திலிருந்து எல்லைப்படுத்தப்படல், குற்றநடத்தைகளில் இருந்து வெளிவருவதற்கான கடினத்தன்மை மற்றும் முயற்சியின்மை போன்றவற்றுடன் மீள்சமூகமயமாக்கலின் மூலமாக தாங்களும் சமுதாயத்தில் முன்மாதிரியான பிரஜையாக வர வேண்டும் போன்ற உள மாற்றங்களும் பிரதான விளைவுகளாக இனங்காணப்பட்டுள்ளன. சிறுவர்கள் சமூகத்தின் நாளைய பிரஜைகள் சிறுவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் பெறுமதிமிக்கவை. இளங்குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்படும் சிறுவர்களை தொடர்ந்தும் குற்றவாளிகள் என முத்திரைக்குத்தாமல் அவர்களையும் சமூகத்தினுடைய எதிர்க்காலத்திற்கான சிறந்த உறுப்பினராக செயற்படுவதற்கான வாய்ப்பினையும் சூழலையும் உருவாக்க அரசாங்கம் தொடக்கம் தனிநபர் வரையிலும் சமூகத்தின் அனைத்து கூறுகளினுடைய பங்களிப்பும்

அவசியமானதாக அமைந்துள்ளது. இவ்வாறான விடயங்களை முன்னிலைப்படுத்திய வகையில் ஆய்வானது இளங்குற்ற நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் சமூக குடித்தொகை, தனிநபர் சார்ந்த காரணிகளும் விளைவுகளை இனங்காண்பதுடன் எதிர்கால ஆய்வுகளுக்கான முன்னேடியாகவும் அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** இளங்குற்ற நடத்தை, சிறுவர்கள், சான்று பெற்ற பாடசாலை, மீள்சமூகமயமாக்கல்

## 1. ஆய்வு அறிமுகம்

உலகலாவிய ரீதியில் இள வயதுப்பிரிவினரிடையே குற்ற செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக 12 தொடக்கம் 18 வயதுப்பிரிவினரிடையே குற்ற நடத்தைகள் அதிகமாக உள்ளமையை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. பதினெட்டு வயதிற்கு உட்பட்ட தனியன் ஒருவரினால் சமுதாயத்தின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நடத்தை எந்த வகையில் இருந்தாலும் அது இளங்குற்றநடத்தை ஆகின்றது. இக்குற்றநடத்தையை மேற்கொள்வோரை ‘‘இளம் குற்றவாளிகள்’’ என அழைப்பர். உலக நாடுகளில் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட அனைவரும் சிறுவர்களாக கருதப்படுகின்றனர். அவர்களில் குற்ற நடத்தைகளில் ஈடுபடுபவர்கள் சிறுவர் ‘‘இளம் குற்றவாளிகள்’’ என அடையாளப்படுத்தப்படுகின்றனர் (Unicef, 2019). குற்றவியல் நிபுணரான Ferdinand வரையறுப்பதன் படி சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத நடத்தைகளில் ஈடுபடுகின்ற அல்லது விலகல் நடத்தைகளில் ஈடுபடுகின்ற சிறுவர்கள் இளங்குற்றவாளிகள் என அழைக்கப்படுகின்றனர் (Berger & Gregory, 2009).

இளங்குற்ற நடத்தையில சமூக, குடும்ப, பாடசாலை, பொருளாதார மற்றும் தனியாள் சார்ந்த காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. சமூக ரீதியான காரணிகள் எனும் போது சமூக ரீதியான சூழமைவு, சமூக வலைப்பின்னல், சமூக உறுதிப்பாடு போன்றவை பிரதானமாக உள்ளன. குறிப்பாக சேரிகளில் அல்லது பின்தங்கிய பிரதேசங்களை சேர்ந்த சிறுவர்கள், அதிகமான குற்ற நடத்தையுடன் தொடர்புடைய சூழலில் வளர்பவர்கள், எதிர் கலாச்சார செயற்பாடுகளை பின்பற்றல், மது, போதைப்பொருளின் கிடைப்பனவு மற்றும் சமுதாய புறக்கணிப்பு போன்றன இளங்குற்றவாளிகளை தோற்றுவிக்கின்றன. குடும்பம் எனும் போது சிதைவடைந்த குடும்பம், ஒற்றை பெற்றோரை கொண்ட குடும்பம், முறையற்ற திருமணம் மற்றும் திருமணத்திற்கு அப்பாலான உறவுகள், குடும்ப உறவுகளில் இருந்து ஒரம்கட்டப்படல், பெற்றாரியம், மது, போதைப்பொருள் பாவணை போன்றவை தாக்கம் செலுத்துகின்றன. பாடசாலை எனும் போது சிறந்த கல்வியை வழங்காமை, இடைவிலகல், நண்பர் குழாம், சமூக அடுக்கமைவு கல்வியில் தாக்கம் செலுத்தல் போன்றன பாடசாலை சார்ந்த காரணிகளாக உள்ளன. பொருளாதாரம் எனும் போது குடும்ப வறுமை, இள வயதிலேயே தொழிலாளராக மாறுதல், பலவந்தமாக பாலியல் தொழில்களுக்கு உற்படுத்தப்படல், வர்க்கம் போன்ற காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.தனிநபர் சார்ந்த காரணிகள் எனும் போது நவீனமயமாக்கலினால் உந்தப்பட்டு விலகல் நடத்தையில் ஈடுபடல், குடும்பம், சமூகம் போன்ற சூழ்நிலைகளில் ஏற்படும் மன விரக்தி, சக வயது பிரிவினரை போலச்செய்தல் போன்ற விடயங்களுடன், உயிரியல் சார்ந்த காரணிகளும் அதிகமாக இளங்குற்ற நடத்தையில் செல்வாக்கு செலுத்துகின்றன (Miles et al 2015).

இளங்குற்ற நடத்தையினால் ஏற்படும் விளைவுகளாக ஆரோக்கியமற்ற வாழ்கை, உயிராபத்துக்கள் நிறைந்த குற்றங்களில் ஈடுபடல், மது, போதைப்பொருள் பாவணை, கொலை, கொள்ளை, கடத்தல், சகவயது சிறுவர்களையும் குற்றச்செயற்பாடுகளில் ஈடுபட தூண்டுதல், கல்வியை பெற்றுக்கொள்ள முடியாமை போன்றன எதிர்காலத்தினை பாதிப்பதாக அமையும். இவ்வாறான பல விளைவுகள் தனிநபர், குடும்பம், சமுதாயம் போன்ற மட்டங்களில் தாக்கம் செலுத்துவது முழு சமூகத்தினுடைய செயற்பாட்டினையும், சமூக உறுதிப்பாட்டினையும் பாதிப்பதாக அமையும்.

உலகலாவிய ரீதியில் இளங்குற்ற நடத்தைகள் அதிகமாக பதிவு பதிவுசெய்யப்பட்டது அமெரிக்காவில் ஆகும். மொத்த சிறுவர்களின் சனத்தொகையில் 48% ஆனோர் இளங்குற்ற நடத்தை காரணமாக சீர்திருத்த பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்தியாவில் 2016ம் ஆண்டு 38,455 சிறுவர்கள் குற்ற நடத்தைகளில் ஈடுபட்டுள்ளதோடு 2017 இல் அந்த எண்ணிக்கை 44,000த்தினை விட அதிகரித்து உள்ளதாகவும் தேசிய குற்ற பதிவு பதிவகம் குறிப்பிடுகின்றது (National Crime Records Bureau, 2018). இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் சிறுவர்கள் 36% ஆக உள்ளனர். 2016 ஆம் ஆண்டில் 169 பேரும் 2017ஆம் ஆண்டில் 428 பேரும் 2018 ஆம் ஆண்டில் 300 சிறார்கள் இளங்குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர் (Prison Ststistics of Sri Lanka- 2019). சிறுவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விலகல் செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் சமூக உறுதிப்பாட்டினை, எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளன. சிறுவர் மத்தியில் ஏற்பட்டுள்ள குற்ற விகிதங்களை குறைப்பதன் ஊடாகவே நாட்டினுடைய சமூக நிலைத்திருக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதாக அமையும். பல ஊடகங்கள் இன்று சிறுவர் மீதான வன்முறைகள் தொடர்பான பல சம்பவங்களை உடல், உள மற்றும் பாலியல் சார்ந்த வன்முறைகள் தொடர்பில் கூறுகின்றன (Goonerathne, 2002).

சிறுவர்களை இளங்குற்ற நடத்தையாளர்களாக அடையாளப்படுத்தும் போது அவர்களுக்கான முறையான சிகிச்சைகளை வழங்கி அவர்களை சமூகத்துடன் இணைக்கவேண்டும். அவர்களை சமூகம் புறக்கணிக்குமானால் எதிர்கால சமூகத்தில் பல குற்றங்களுக்கு இச்சிறுவர்கள் காரணமாக அமையலாம்.சிறுவர்கள் தங்களுடைய பாதைகளில் இருந்து விலகி செயற்பட்டாலும் சமூகத்தின் கடமை அவர்களை மீள் சமூகமயமாக்கலுக்கு உற்படுத்தி அவர்களை சமூகத்துடன் இணைப்பது ஆகும். அவர்கள் குற்றவாளிகளாகவோ அல்லது பாதிக்கப்பட்ட குழுக்களாக இருந்தாலும் அவர்களுடைய எதிர்க்காலத்தை பாதுகாக்க வேண்டும்.

இளங்குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டோர் ஏனைய கைதிகளை போல சிறைச் சாலைக்கு அனுப்பாமல் சீர்திருத்த பள்ளிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.இங்கு இவர்களுக்கு உள சார்ந்த ஆற்றுப்படுத்தல்கள், தொழிற்பயிற்சி போன்றன வழங்கப்படுகின்றன. மேலும் தண்டணை காலம் 03 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுடன் தண்டணை காலத்தில் இவர்களுடைய நன்நடத்தை தொடர்பில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன. இதனூடாக இவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்திற்கு ஏற்ற நபர்களாக வெளிவருகின்றனர் (ரஜீவன், 2012). அந்த வகையில் ஆய்வானது யாழ்ப்பாணம் அச்சுவேலி சிறுவர் சீர்திருத்த பாடசாலையை பிரதானமாக கொண்டு ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.இலங்கையில் காணப்படும் ஒரே தமிம் மொழி மூலமான சான்றுபெற்ற பாடசாலையாக அச்சுவேலி சீர்திருத்த பாடசாலை காணப்படுகின்றது. இங்குள்ள சிறுவர்களிடம் அவர்கள் இளங்குற்றவாளிகளாக

உருவாக செல்வாக்கு செலுத்திய காரணிகளையும், இளங்குற்றவாளிகளால் ஏற்பட்ட விளைவுகளை இனங்காண்பதாகவும் இவ் ஆய்வு அமையவுள்ளது.

**2. ஆய்வு பிரச்சினை**

சிறுவர்கள் சமூகத்தில் முக்கியமான வயது பிரிவினராகவும் விசேட தேவைக்கு உட்படுத்த வேண்டியவர்களாகவும் மற்றும் எளிதில் பாதிப்படையும் ஒரு சமூக பிரிவினராகவும் உள்ளனர். சிறுவர்கள் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் இரு பாலாரும் சிறுவர்கள் என CRC[2] வரைவிலக்கணப்படுகிறது (UN, 2010). சிறுவர்கள் உலகின் ஒரு முக்கிய வயது பிரிவினராகவும் துடிப்பு மிக்கவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் சமூக விலகல் நடத்தையானது சிறுவர்களை இளம்வயதிலேயே குற்றச் செயல்களை செய்யத் தூண்டுகின்றது. உலகில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 10.2% ஆன சிறார்கள் இளம் குற்றச் செயல்களை புரிகின்றனர் (Niriella, 2011). இன்றைய சமகால உலகில் அதிகளவான இளம் குற்றங்கள் தீவிரமானதாக நடைபெறுவதோடு இது சமூக கட்டமைப்பிற்கு பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது (Katsiyannis et al, 2008).

இலங்கை அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஒரு நாடாக காணப்படுவதோடு இங்கு அதிக அளவில் ஏற்படும் சமூகப் பிரச்சனைகளில் ஒன்றாக இளங்குற்ற நடத்தையும் காணப்படுகின்றது. இன்றைய பத்திரிகைகளில் பல பக்கங்களில் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாக சிறுவர்களே காணப்படுகின்றனர் (தமிழினி, 2019). இலங்கையில் வடக்கு, கிழக்கு என தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் 30 வருட கால யுத்தத்தின் பின்னர், அண்மை காலங்களில் அதிகளவான குற்றச்செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான குற்றங்களை செய்யும் சிறார்கள் நீதிமன்றத்தின் ஊடாக சிறுவர் நன்னடத்தை அல்லது சான்றுபெற்ற பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டு நல்வழிப்படுத்தப்படுகின்றனர். அந்த வகையில் இலங்கையில் பல்வேறு இடங்களில் பல்வேறு குற்றச் சம்பவங்கள் தொடர்பில் தண்டனை மற்றும் சான்றுபெற்ற பாடசாலைகளில் மறுவாழ்வு அளிக்கப்படும் சிறுவர்கள் 2019 இல் 608 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது (Prison Ststistics of Sri Lanka- 2019).

குடும்பம் என்பது ஒரு சமூகமயமாக்கல் நிறுவனம் ஆகும். இந்த ஆரம்ப சமூகமயமாக்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் தவறான வழிகாட்டல்கள் சிறுவர்களை குற்ற செயல்களில் ஈடுபட தூண்டுகின்றது. சிறுவர்கள் இளம் வயதில் குற்றச்செயல்களை புரிவதற்கான காரணங்களாக, வறுமை, சமூகமயமாக்கலில் ஏற்படும் பிரச்சனைகள், பெற்றோரின் கவனயீனம், சிறுவர்கள் சினிமாவின் மீதுள்ள மோகம், தவறான வழிநடத்தல்கள் காரணமாக அமைகிறது. சமூக வலைதள பாவணை குற்றச் செயல்களை புரிவதற்கான காரணமாக அமைகிறது. பெற்றோர் மரணமடைந்து பிள்ளை தனிமைப்படுத்தப்பட்டிருத்தல், பெண் தலைமை குடும்பங்களின் கீழ் வாழும் சிறுவர்கள், பெற்றோர் விவாகரத்து பெற்றிருத்தல், நண்பர் குழாம், பிள்ளை செய்யும் தவறுகளை தண்டிக்காமல் இருத்தல், குடும்பத்தின் சீர்குலைவுகள் போன்றன சிறுவர்களை குற்ற செயல்களை புரிவதற்கான தூண்டும் காரணிகளாக அமைகின்றன.

இலங்கையில் இளங்குற்ற நடத்தையினால் ஏற்பட்ட விளைவுகள் குறைவாகவே காணப்படுகின்றன. குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டு சான்றுபெற்ற பாடசாலைகளில் மீள் சமூகமயமாக்கத்திற்கு உற்படுத்தப்படுவதன் விளைவாக இளங்குற்றவாளியகளாக

[2] Converntion on the Rights of the Child

அடையாளப்படுத்தப்பட்ட சிறார்கள் தங்களுடைய நடத்தையினை மாற்றியமைத்து கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும் சில சிறார்கள் சான்று பெற்ற பாடசாலையில் இருந்து வெளியேறி சென்றாலும் குற்ற நடத்தைகளில் ஈடுபடும் நிலைமையும் காணப்படுகின்றது.பொதுவாக இளங்குற்ற நடத்தையில் ஈடுபடுவதனால் அதிகமாக மது, போதைப்பொருட்களுக்கு அடிமையாதல், சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படாமல் செயற்படல், பெரியோரை மதிக்காமல் செயற்படல் போன்ற சமூக விழுமியங்களில் இருந்து விலகிச் செயற்படும் நிலையும் இளங்குற்ற நடத்தையால் ஏற்படும் விளைவுகளாக உள்ளன.

தமிழ் சிறார்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு சான்றுபெற்ற இல்லமாக அச்சுவேலி சான்று பெற்ற பாடசாலை காணப்படுகிறது. இங்கு கொள்ளை, கொலை, சிறுவர்களை சிறுவர்களே பாலியல் துஸ்பிரயோகம் செய்தல், விடுதியை விட்டு தப்பிச் செல்லல், பாடசாலைக்குச் செல்லாமல் இருத்தல், இணையதள மற்றும் சமூக வலைதள குற்றங்கள் போன்ற பல்வேறு குற்றச்செயல்களை புரிந்தவர்களே இங்கு காணப்படுகின்றனர். இவ்வாறான குற்றங்களை புரிந்தவர்களே யாழ்ப்பாணத்தில் காணப்படும் அச்சுவேலி சான்று பெற்ற தடுப்பு இல்லத்தில் காணப்படுகின்றனர். வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் என தமிழ் பேசக்கூடிய சிறுவர்களுக்கு காணப்படும் சான்றுபெற்ற பாடசாலையாக அச்சுவேலி காணப்படுகின்றது. இங்கு இளங்குற்ற நடத்தைகளின் காரணங்களையும், விளைவுகளையும் கண்டறிவதற்கு ஆய்வானது மேற்கொள்ளப்படுவதோடு, சிறுவர்களின் இளங்குற்ற நடத்தை சமூகத்தில் பாரிய சமூக இடராக காணப்படுவதோடு கட்டாயமாக ஆராயப்பட வேண்டிய தேவையும் உள்ளது.

## 3. இலக்கிய மீளாய்வு

### 3.1. குடும்பம்சார் காரணிகள்

இளங்குற்ற நடத்தைக்கான அதிக தாக்கம் குடும்ப ரீதியிலான விசைகளாளேயே ஏற்படுகின்றது. Berger & Gregory (2009), குடும்ப கட்டமைப்பு தொடர்பில் பார்க்கின்ற போது, முதலாம் நிலை சமூகமயமாக்கல் முகவராக உள்ள குடும்பத்தில் ஏற்படும் சிதைவு/உடைவு சிறார்களின் சமூகமயமாக்கலில் அதிக தாக்கம் செலுத்துகின்றன. சமூகமயமாக்கலில் ஒரு நபர் சமூகத்துடன் பிணைக்கப்படுகின்றார். இந்த பிணைக்கப்படும் உறவின் உறுதித்தன்மை பலவீனமாக இருக்கும் பொழுது குறித்த நபர் சமூக கட்டுப்பாடுகளில் இருந்து விடுபடுவார். இந்நிலை இடர் நிலையினை தோற்றுவிக்கலாம். பெற்றோருக்கும் சிறுவர்களுக்குமான பரஸ்பர ஈடுபாடு, மதிப்பு ஆகிவற்றினை இணைக்கின்றது (Attachment), தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான அர்பணிப்பு (Commitment), நல்ல விடயங்களில் நேரத்தினை செலவிடல் (Involvement), சட்டங்களின் தார்மீக செல்லுபடியாகும் நிலைகளை ஏற்றுக்கொள்ளல் (Trust/Belief) என்றவாறு அமைந்துள்ளது. அத்துடன் சமூக இடைத்தொடர்பை ஏற்படுத்துவதில் குடும்பத்தின் பங்களிப்பு முக்கியமானது. சமூக இடைவினையை பெற்றோர் பிள்ளைகளுக்கு கட்டியெழுப்ப வேண்டும். அதில் ஏற்படும் குறைபாடு விலகல் நடத்தையை ஏற்படுத்தும். குடும்பங்களில் நிலவும் வன்முறைகள், பால்நிலைசார் வன்முறைகள், துன்புருத்தல், சமுதாய தொடர்பாடல் துண்டிக்கப்படல், வலுவூட்டல் இன்மை, சமூக வகுப்பு மற்றும் இன ரீதியான தாக்கங்கள் குடும்பத்திற்கு ஏற்றதல்ல. இவை குடும்பத்தின் சிதைவுக்கு காரணமாக அமைந்துள்ளது.

Niriella (2011), குடும்பத்தின் சிதைவுகள் மற்றும் பிள்ளளைகள் மீதான பெற்றோரின் அதிக கட்டுப்பாடுகள் மூலமாக இளங்குற்ற நடத்தை தூண்டபட்படுகின்றது. குடும்பங்களில் பெற்றோர்

விவாகத்து பெற்று இருத்தல், பிரிந்து வாழும் வீதம் அதிகம் (Mutual Separate rater), வீட்டு வன்முறை, தந்தைகளின் இழிவான வார்த்தை பிரயோகம் மற்றும் சண்டைகள், மது மற்றும் போதை பொருட்களின் பாவணை, சூதாட்டம் பொன்ற காரணிகள் பிள்ளைகளை சமூக வீரோத செயற்பாடுகளை நோக்கி தூண்டுகின்றன. அத்துடன் இவருடைய ஆய்வில் நகர்புற சூழல் குற்றங்களுக்கு காரணமாவதனையும் வெளிப்படுத்தியுள்ளார்.

Patoari (2020), குடும்ப சிதைவானது பங்களாதேஸில் சிறுவர்கள் குற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கு பிரதான காரணமாக இருக்கிறது. குறிப்பாக மணமுறிவு என்பது பிள்ளைகளின் விலகல் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகிறது. குடும்பத்தின் சிதைவானது சிறுவர்களை குற்றச் செயலில் ஈடுபட தூண்டுகின்றது. சிதைவடையாத குடும்பங்களில் உள்ள சிறுவர்களை விட சிதைவடைந்த குடும்பத்தில் உள்ளவர்கள் அதிகமாக குற்ற நடத்தையில் ஈடுபடுகின்றனர். மேலும் இளங்குற்ற நடத்தையில் ஈடுபடும் சிறார்களினால் குடும்பங்கள் உள சார்ந்த தாக்கங்களிற்கும் உள்ளாகின்றனர்.

Wardle (2008), திருமணத்தில் பின் கணவன் மனைவிக்கு நிலையான உறவு காணப்படும் போது பெற்றோரின் வகிபாகமானது குழந்தைக்கு வெற்றிகரமானதாகவும் மகிழ்ச்சியான வாழ்க்கையும், பெறும் நன்மையும் குழந்தைகளினுடைய வாழ்க்கையில் ஏற்படும். விவாகரத்து பெற்ற குடும்பத்திலுள்ள குழந்தைகள் அதிகமான குற்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக அதிகமாக வேலையின்மை, பாடசாலை இடைவிலகல், பாலியல் நடத்தை, எதிர் சமூகத் தொழிற்பாடு என்பன ஒற்றை பெற்றோர் மட்டும் கொண்ட குடும்பங்களை விட அல்லது 2 பெற்றோரையும் கொண்ட குடும்பங்களிலும் பார்க்க விவாகரத்து பெற்ற குடும்பங்களின் குழந்தையானது குற்றச் செயல்களில் அதிகமாக ஈடுபடுகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.மேற்குறிப்பிட்டவாறு குடும்ப ரீதியான காரணிகள் இளங்குற்ற நடத்தையில் தாக்கம் செலுத்துவதனை காணலாம். அத்துடன் மேற்குறிப்பிட்ட இலக்கிய மீளாய்வுகளும் இவ் ஆய்வினை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கும் உதவியாய் அமைந்துள்ளது.

### 3.2. பொருளாதாரம் சார் காரணிகள்

இளங்குற்ற நடத்தைகளில் ஈடுபடுகின்றவர்களில் பலர் வறுமையினால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களில் பலர் ஆரம்பத்தில் சிறுவர் தொழிலாளர்களாவே தோற்றம் பெறுகின்றனர். Birkenhead (2012), அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறையுள், கல்வி என்பவற்றை வழங்க முடியாத குடும்பங்களில் உள்ள சிறுவர்கள் மத்தியில் இளம் குற்ற நடத்தை முக்கியத்துவம் பெற்று காணப்படுகிறது.

Chowdhury & Fahim (2019), தீவிர வறுமையால் சிறுவர்கள் முதல்நிலை கல்வியினைக் கூட பூர்த்தி செய்ய முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இவர்கள் தங்களுடைய குடும்பங்களின் பொருளாதார தேவையினை பூர்த்தி செய்வதற்காக வேலைக்கு செல்கின்றனர். இதனால் சிறுவர் தொழிலாளர்களர்களாக மாறுவதுடன் தங்களுடைய வாழ்க்கையினை கொண்டு செல்வதற்கு தவறான வழிகளை நாடுவதால் இவர்கள் கொடுர செயல்களில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக கொள்ளை, மிரட்டி பணம் பறித்தல், கடத்தல், கொலை, பாலியல் துஸ்பிரயோகம் போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்றனர்.

Niriella (2011), வறுமையும் இளங்குற்ற நடத்தைக்கு காரணமாக குறிப்பிடுகின்றார். பெற்றோரின் இயலாமை, தேவைகளை பூர்த்தி செய்யாமை, நடுத்தர வர்க்க குடும்பங்களில்

உள்ள சிறார்கள் மத்தியில் இளங்குற்ற நடத்தைகள் அதிகமாக உள்ளதுடன் உயர்வர்க்க குடும்பங்களிலும் இளங்குற்றவாளிகள் உருவாக்கப்படுகின்றனர்.குறிப்பாக பெற்றோர் செல்வம் சேர்ப்பதில் அக்கறையாக இருப்பதனால் பிள்ளைகள் மீதான அக்கறை குறைவடைந்து அவர்கள் மீதான கவனிப்பும் குறைவடைகின்றது. இதன் விளைவு பிள்ளைகளும் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த, தனிமையை போக்கி கொள்ள சில செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.அவை சில நேரங்களில் விலகல் நடத்தையாகவும் அமையலாம். குறிப்பாக சுய ஒழுக்கமின்மை, விலகலில் ஈடுபடும்/தவறான சகாக்களுடனான நட்பு குற்றநடத்தைக்கான வாய்ப்பாக அமைந்துள்ளன.

**3.3. பாடசாலைசார் காரணிகள்**

சமூகமயமாக்கலின் இரண்டாம்நிலை முகவராக தொழிற்படும் சமூக நிறுவனமான பாடசாலை சிறுவர்களை வினைத்திறனாக மாற்றும் தொழிலை செய்கின்றது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் தன்னுடைய நெறிமுறைகளில் இருந்து விடுபட்டு செயற்படும் போது சிறுவர்களுக்கு தேவையான ஒழுக்கம் மற்றும் நற்பண்புகளை முறையாக கற்று கொடுக்க தவறுகின்றது. Berger & Gregory (2009), பாடசாலை குற்றநடத்தை(School Deliquesce) பாடசாலையில் வர்க்கம் சார்ந்த அடுக்கமைவுகள், அடையாளப்படுத்தல் (Labeling) போன்றன இளங்குற்ற நடத்தைக்கான ஆரம்ப நிலையாக உள்ளன. சில சந்தர்பங்களில் பாடசாலை இடைவிலகல் இளங்குற்ற நடத்தைக்கு காரணமாக அமையலாம். கல்வி அடைவுகளை பெற தவறியமை, கல்வி மீதான வெறுப்பு, பாடசாலை மிதான வெறுப்பு இடைவிலகளை தூண்டுகின்றன. அதே வேளை பாடசாலைகளில் அதிகமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதும், பாரபட்சம் காட்டப்படுவதும் குற்ற நடத்தைக்கு காரணமாக அமையலாம். சமூகமயமாக்கலை தவறான வழியில் கற்றுக்கொடுத்து தவறான வழியில் வழிப்படுத்தல், மாணவர்களுடைய நடவடிக்கைகளுக்கு ஆசிரியர் பிரதிபலிக்கும் விதம், மாணவர்களை முத்திரை குத்தல் போன்றவை மாணவர்களின் உள ரீதியான தாக்கங்களையும் வடுக்களையும் ஏற்படுத்தலாம்.

Chowdhury, Khan & Uddin (2012), சிறுவர்கள் எளிதில் பாதிப்படையும் குழுவாக காணப்படுவதோடு எந்த ஒரு சமூக விரோத செயலுக்கும் (Anti-Social) அவர்களின் பதில் நடவடிக்கைகள் மிக வேகமாகவும், சில சமயம் நண்பர்களின் அழுத்தம் காரணமாகவும் இளங்குற்றநடத்தக்கு தூண்டப்படுகின்றனர் என்பதனையும் முன்வைத்துள்ளார்.

Edumund (1976), குறிப்பாக நண்பர் குழாத்தின் (Peer Group) செல்வாக்கு அதிகளவில் உள்ளன. குறிப்பாக குடும்பத்தினால் வழங்கப்படாத அல்லது கிடைக்காத சுதந்திரம், உள நெருக்கீடுகளில் இருந்து விடுபட இக்குழுக்கள் துணையாக அமைந்துள்ளன. இக்குழுக்களின் பிழையான வழிகாட்டுதல்களும் இளங்குற்றவாளியாக உருமாற காரணமாக அமைகின்றன.

Omogho Esiri (2016), பாடசாலைகளில் பிள்ளைகளின் சுயம் வெளிப்படும் விதம் தொடர்பில் குறிப்பிடும் போது, அதிகபடியான குற்ற நடத்தைகளில் ஈடுபட்ட மாணவர்கள் பிளவடைந்த அல்லது சிதைந்த குடும்பத்தில் இருந்து வந்தவர்களாக இருக்கின்றனர்.இவர்களில் பலர் பாலியல் ரீதியாக துன்புருத்தப்பட்டுள்ளர்.இவ்வாறான நிலையில் குறித்த மாணவன் விலகலில் ஈடுபட்டும் போது அவனுடன் சேர்ந்து ஏனைய மாணவர்களும் விலகலில் ஈடுபடுகின்ற சூழ்நிலையும் காணப்படுகின்றது.

### 3.4. சமூக ரீதியிலான காரணிகள்

சமூகத்திற்கு எதிரான உந்துதல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக அல்லது தார்மீக தரங்களை மீறும் மற்றும் தனிநபர்களை சமூகத்துடன் மோதலுக்குல் கொண்டு வரும் ஒரு தனிநபர் அல்லது குழுவின் தொடர் செயன்முறையாக இளங்குற்ற நடத்தை காணப்படுகின்றது.Baba & Ahmad(2007), சமூகம் சார்ந்த காரணிகள் எனும் போது சகபாடி குழு மற்றும் ஊடகம் போன்றவை எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தலாம். புகைப்பிடித்தல், கும்பல் மோதல்கள்(Gang Fights), ஆபாச பொருட்கள் அல்லது வீடியோக்கள் போன்றவை ஆரம்ப நிலையிலேயே தாக்கம் செலுத்துதல் போன்றவை இளங்குற்ற நடத்தைக்கு தாக்கம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

Chowdhury & Fahim (2019), கைத்தொழில்மயமாக்கத்தாலும், நகரமயமாக்கல் குடும்ப முறைகளின் மாற்றம், சமூக ஊடகங்களின் தாக்கத்தாலும் குறிப்பான முகப்புத்தகம் மற்றும் தொலைக்காட்சி தாக்கத்தால் கூட்டுக் குடும்பங்கள் தனிக் குடும்பங்களாக பிரிந்து வாழ்கின்றனர்.அவர்களின் சொந்த பண்பாட்டிற்கு அப்பால் வெளிநாடுகளின் பண்பாட்டு கலாசாரங்களும் வருகிறது.வெளிநாட்டு கலாசாரத்தினால் புகைப்பிடித்தல், போதைப் பொருள் கடத்தல், போதைப் பொருள் வியாபாரம், விலைமதிப்புள்ள பொருட்கள் பறித்தல், மிரட்டிப் பணம் பறித்தல், கொள்ளை மற்றும் படுகொலை செய்யும் நிலைமையையும் பங்களாதேஸ் அனுபவத்தினூடாக குறிப்பிடுகின்றனர

Delcea et al (2019), துணைக்கலாச்சாரங்கள் காரணமாக ஏற்படும் தாக்கங்கள் காரணமாக இளங்குற்ற நடத்தை தூண்டப்படுகின்றன. பல குழுக்கள் அடிக்கடி சட்டவிரோத நடவடிக்கைகள், கும்பல்களுக்கு இடையில் போட்டி நிலவுகின்றமை, கார் திருட்டு, உடல் ரீதியான தாக்குதல்கள், திருட்டு மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்திலும் ஈடுபடுகின்றனர்.

Khurshid & Urooj (2012), இன்றைய நவீன சமூகத்தில் சமூக கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதில் சட்ட முறைமைகள் அதிகம் தாக்கம் செலுத்துகின்றன.இளங்குற்றங்களுக்கு காரணங்களாக சமூக சூழல், குற்றங்கள் நிறைந்த சேரிப்புறங்கள், வறுமை, வேலையின்மை ஆகியவற்றுடன் சமூகம் ஒரு பல்பரிணாம நிலையில் கொண்டிருப்பதுடன், பொருளாதார, சமூக மற்றும் உள ரீதியான அம்சங்களும் அடங்குகின்றன.இவற்றுடன் வீட்டினுள்ளும் வெளியேயும் உள்ள சூழல், கட்டுப்படுத்தப்படாத மக்கள் தொகை, ஊடகங்கள் மற்றும் கணிணி, செல்லிட தொலைபேசிகள் போன்றவற்றின் தாக்கம், வாழ்கை சூழல், ஒழுக்க கல்வி இன்மை, போன்றவையும் காரணமாக அமைந்துள்ளன.

Manjur (2020), சினிமாவினுடைய தாக்கம், தொலைக்காட்சி நாடகங்கள் என்பவை சில நேரங்களில் சிறுவர்களை சமூகத்தில் எதிர்நிலையாக தொழிற்பட வைப்பதற்கு பயிற்சியளிக்கின்றது. இதனால் அவர்கள் குற்ற நடத்தையில் ஈடுபடுகின்றனர். சமூகத்தில் போதைப்பொருட்களின் புழக்கம் மற்றும் பாவணை அதிகமாக இருக்கும் போது அவை சிறுவர்களுக்கும் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அதிகளவாக போதைப்பொருட்களுக்கு அடிமையாகும் சிறார்கள் மத்தியில் நம்பிக்கையின்மை ஏற்படுவதுடன் பொது அறிவு மற்றும் சமூக நெறிமுறைகளை பகுத்தறிந்து செயற்படுவதற்கான உள ஆற்றல் கிடைப்பதில்லை. அத்துடன் தனிநபர் சார்ந்த கட்டுப்பாடு மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் கட்டுப்படாமல் போதைப்பொருள் கொள்வனவிற்காக குடும்பத்தினரை சித்திரவதை செய்தல்,

திருடுதல், கொலை, ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

Mojares et al (2015), சமூக ஊடகமானது நண்பர்கள், உறவினர்கள் மற்றும் தெரிந்த நபர்களை அறிமுகப்படுத்தும் மூலமாகவும் செயற்படுகின்றது. அனைத்து விடயங்களையும் இணையம் வாயிலாக பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கின்றமையானது இள வயது பிள்ளைகளை பிழையான வழிமுறைக்கு ஈட்டுச் செல்லும்.

இலங்கையை பொருத்த வரையில் அதிகமாக தொழிநுட்ப சாதனங்களை பயன்படுத்தல், சுய கட்டுப்பாடு அற்றுப்போதல், சினிமா மற்றும் ஊடகங்களின் தாக்கம், நவீன கலாச்சாரங்களின் தாக்கம் போன்றவை இளங்குற்ற நடத்தையில் தாக்கம் செலுத்துகின்றன. ஆயினும் இலங்கையில் கிராம புறங்களை விட நகர் புறங்களிலேயே இளங்குற்றவாளிகள் அதிகமாக தோற்றம் பெறுகின்றனர் (Niriella, 2011). அந்த வகையில் மேற்குறிப்பிட்ட இலக்கிய மீளாய்வுகளும் இவ் ஆய்வினை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு உதவியாய் அமைந்துள்ளன.

### 3.5. இளங்குற்ற நடத்தையில் தாக்கம் செலுத்தும் தனிநபர் சார்ந்த காரணிகள்

தனி நபருடைய எண்ணம், சிந்தனை, நடத்தை ஆகியவை ஓர் பரிணமாத்தில் அமைந்தவை (Omogho Esiri, 2016). இவை அனைத்தும் பாலினம், வயது, கலாச்சாரம் ஆகியவற்றினை தீர்மானிப்பதாக அமைந்துள்ளன. குறிப்பாக குழுக்களில் இருந்து புறந்தள்ளப்படும் போது அல்லது குழுக்களில் உள்ளேயே வேறுபடுத்தி பார்க்கும் போது ஆளுமை மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. Baba & Ahmad (2007), தனிநபர் சார்ந்த பண்புகள் என்கின்ற போது சுய மரியாதை. சமாளிக்கும் திறன், மதம், ஆளுமை பண்பு கூறுகள், குறைபட்ச கல்வி அடைவு, பாடசாலையில் தோல்வி, எழுத்தறிவு வீத குறைவு ஆகியவை இளங்குற்ற நடத்தையில் தனிநபர் சார்ந்த காரணிகளாக காணப்படுகின்றன என்கின்றனர்.

Delcea et al (2019), இள வயதிலேயே அதிகளவான மன உளைச்சல், குறைந்தளவான சுய கட்டுப்பாடு ஆகிய பண்புகள் சிறுவர்களிடத்தே ஏற்படும் போது அதிலிருந்து இலகுவில் வெளிவர முடியாத சந்தர்பங்கள் இவ்வயது பிரிவினருக்கு அதிகமாகவே ஏற்படும். எனவே தங்களுடைய மன உளைச்சல் காரணமாக அதிலிருந்து வெளிவர முறையற்ற செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். மேலும் சுய கட்டுப்பாடு இல்லாத போது இளங்குற்ற நடத்தைக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

Niriella (2011), ஆரம்ப பருவ உடலியல் முதிர்ச்சி, குறைந்த நுண்ணறிவு மட்டம், தவிர்க்க முடியாத தூண்டுதல்கள் போன்றவை உயிரியல் சார்ந்த காரணிகளாக அமைந்துள்ளன. இவை மட்டுமன்றி கல்வியறிவு, சிறுவர் தொழிலாளர், மோசடி மற்றும் கீழ்படியாமை ஆகியவற்றையும் இளங்குற்ற நடத்தைக்கு காரணமாக அமையலாம்.

Omogho Esiri (2016), பெற்றோர் பிள்ளைகளுக்கு மன நிறைவை ஏற்படுத்த வேண்டும். இதனை மறுக்கும் சந்தர்ப்பத்தில் பிள்ளைகளிடத்தே மனவெழுச்சிசார் பிரச்சினைகள் ஏற்படுவதுடன் அது தவறான நடத்தையுடைய நண்பர் குழாத்துடன் சேர்வதற்கன வாய்ப்பை ஏற்படுத்தும். இந்த நண்பர் குழாத்துடனான உறவு இவ் நண்பர்களினால் வழங்கப்படும் அழுத்தம் உளவியல் ரீதியாக சுயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். இது விலகல் நடத்தைக்கு காரணமாக அமையலாம். ஒரு குழந்தையின் உடலியல் சார்ந்த அம்சங்கள் ஆரம்பத்திலேயே முறையாக

வளர்ச்சியடையாமை, வலுவிழப்பு போன்ற நிலைமைகள் உள ரீதியான தாக்கத்தினை குழந்தைகள் மத்தியில் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக ஏனைய சிறுவர்களை போல சாதாரணமாக சமூகத்தில் பழகுவதற்கு இவர்கள் மத்தியில் காணப்படும் தாழ்வு மனப்பான்மை ஒரு தடையாக அமைந்துள்ளது. அத்துடன் ஏனைய மாணவர்களும் குறித்த சிறுவர்களை தங்களுடைய குழுக்களில் சேர்த்து கொள்வதில் தயக்கம் காட்டுகின்றனர். மேற்குறிப்பிட்ட இலக்கிய மீளாய்வுகளின் முடிவுகளும் ஆய்வினை தொடர்ந்து முன்னெடுக்க அடிப்படையாக அமைந்தன.

## 4. கோட்பாட்டு பிரயோகம்

### 4.1. சமூக கட்டுப்பாட்டு கோட்பாடு (Social Control Theory)

சமூக கட்டுப்பாட்டு கோட்பாட்டின்படி உள்ளக மற்றும் வெளிப்புற கட்டுப்பாடுகள் இரண்டும் விலகல் நடத்தையில் தாக்கம் செலுத்துகின்றன.சமூக கட்டுப்பாடு கோட்பாடு 1958 ஆம் ஆண்டில் Ivan Nye என்பவரல் உருவாக்கப்பட்டது. இந்த கோட்பாடு தொழிற்பாட்டுவாத கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதுடன் சமூகமயமாக்கல், சமூக கற்றல் மற்றும் சுய கட்டுப்பாடு போன்றவற்றின் மூலமாக குற்ற நடத்தைகளில் ஈடுபடுவது மற்றும் அதனை குறைப்பது தொடர்பில் வெளிப்படுத்தல் கோட்பாடாகும். சிறுவர்களுக்கு அவர்களுடைய நடவடிக்கைகளில் அதிகளவிலான கட்டுப்பாடுகளை விதிப்பதனால் குறித்த சிறுவர்களுக்கு தங்களை சூழவுள்ள நபர்கள் மீதான வெறுப்பு ஏற்படுவதுடன் அதிக கட்டுப்பாடு காரணமாக தடுக்கப்படும் சுதந்திரமும் வாய்ப்புக்களையும் எப்படியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அதித கட்டுப்பாட்டுடன் வளரும் சிறார்களிடம் ஏற்படுகின்றது. குறிப்பாக விடுதிகளில் வளரும் குழந்தைகளிடம் அதித கட்டுப்பாடுகள் குற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான நிலைமையை அதிகளவில் உருவாக்கியுள்ளதுடன் மத ரீதியான ஒழுக்கத்தினை பின்பற்றும் குடும்பங்களிளும் இளங்குற்றவாளிகள் உருவாக அதிக கட்டுப்பாடு காரணமாகின்றது.அந்தவகையில் இளங்குற்ற நடத்தைக்கான காரணிகளையும் விளைவுகள் எனும் இவ் ஆய்வில் சான்றுபெற்ற பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்ட சிறார்ளின் மீது வழங்கப்படும் அழுத்தங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் எவ்வாறு இளங்குற்ற நடத்தையில் ஈடுபட வைக்கின்றன என்பதனை இனங்காண்பதற்கு இக்கோட்பாடு பொருத்தமானதாக அமைந்துள்ளது.

### 4.2. அனோமி கோட்பாடு (Anomic Theory)

எமில் துர்கைய்ம் தன்னுடைய தற்கொலையின் பொருண்மையை தெளிவுபடுத்தும் போது அனோமி தொடர்பில் குறிப்பிட்டுள்ளார். அதாவது அனோமி தற்கொலை சமூக நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான சமூக தரங்களை தகர்க்கின்ற விளைவாகும் என்கின்றார். ஒரு சமூக முறைமை ஓர் அனோமியாக இருக்கின்ற போது, பொதுவான மதிப்புக்கள் மற்றும் பொதுவான அர்த்தங்கள் புரிந்த கொள்ளவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோபடாது.மேலும் இங்கு புதிய அர்த்தங்கள் மற்றும் மதிப்புக்கள் உருவாகவில்லை அல்லது மேம்படாடையாது. துர்கைய்மின் கூற்றின் படி இவ்வாறான சமூகம் உறவினர்களின் பயனற்ற உணர்வு, உணர்ச்சி மற்றும் விரக்கதி ஆகியவற்றால் வகைப்படுத்தப்படும் உளவியல் நிலைகளை உருவாக்குகின்றது. எமில் துர்கைய்மின் அனோமி தொடர்பான விடயங்களை கொண்டு 19 ஆம் நூற்றாண்டில் Robert K. Merton அனோமி கோட்பாடு (Stain Theory) உருவாக்கினார். குறிப்பாக குற்றவாளிகள் தங்களுடைய இலக்குகளை சட்டரீதியாக அடைந்து கொள்ள தவறான வழிகளை தேர்ந்தெடுப்பதனால் குற்றங்கள் ஏற்படுகின்றன என்றார். மிகவும் மோசமான மற்றும் வளமிகுந்து சூழல்களில் இருந்து தப்பிக்க சட்டவிரோத முயற்சிகளால் குற்றங்கள்

ஏற்படுகின்றன. ஒட்டுமொத்தமாக இவ்வாறான அனோமி வகைகள் பல்வேறு பண்புக்கூறுகளை கொண்டிருக்கும். குறிப்பாக இப்பண்புக்கூறுகள் குற்றங்களுக்கு காரணமாக உள்ளன. உதாரணமாக சிறுவர் துஸ்பிரயோகம் அல்லது புறக்கணிப்பு மற்றும் பாகுபாடு ஆகியவை குற்றவியல் நடத்தைக்கு வழிவகுக்கும் காரணிகளாக உள்ளன. இத்தகைய விடயங்கள் அநீதியாகவும் அல்லது கடுமையானதாகவும் தனிநபர்கள் சமூக ரீதியாக தண்டிக்கப்படுவதாகவும் கருதப்படுகின்றது. எனவே தனிநபர்கள் சமூக கட்டுப்பாட்டு பொறிமுறைகளுடன் அடையாளப்படுவதில் உள்ள குறைபாடுகள் குற்றங்களில் ஈடுபட வழிவகுக்கும்.

**5. ஆய்வு வினாக்கள்**

1. இளங்குற்ற நடத்தையில் ஈடுபடுவதில் சமூகக் குடித்தொகைக் காரணிகளின் செல்வாக்கு எத்தகையது?
2. இளங்குற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கான தனிநபர் சார்ந்த காரணிகள் எவை?
3. சான்று பெற்ற பாடசாலையின் புனர்வாழ்வு செயற்பாடுகள் மீள் சமூகமயமாக்களில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை?
4. முறைசார்ந்த சமூக நிறுவனங்கள் இருந்தும் இளம் குற்ற நடத்தை இடம்பெறுவதற்கான காரணிகள் எவை?

**6. ஆய்வின் நோக்கங்கள்**

**6.1. பொது நோக்கம்**

- இளங்குற்ற நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் சமூக குடித்தொகை, தனிநபர் சார்ந்த காரணிகளையும் விளைவுகளையும் இனங்காணல்.

**6.2. சிறப்பு நோக்கங்கள்**

- இளங்குற்ற நடத்தைக்கான சமூகக் குடித்தொகைக் காரணிகளை இனங்காணல்.
- இளங்குற்றம் நடத்தைக்கான தனிநபர் சார்ந்த காரணிகளை இனங்காணல்.
- இளங்குற்ற நடத்தையால் ஏற்படும் விளைவுகளை இனங்காணல்.
- சான்று பெற்ற பாடாலையில் மீள்சமூகமயமாக்கல் மூலமான தாக்கங்களை இனங்காணல்.

**7. ஆய்வு முறையியல்கள்**

**7.1. ஆய்வு நிறுவனம்**

ஆய்வானது போருக்கு பிந்தைய சமூகமாக காணப்படும் சிறுவர்களை உள்ளடக்கியுள்ளதோடு, தமிழ் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு தழில் சிறுவர்களுக்கான நன்நடத்தை பாடசாலையாகவும் காணப்படுகின்றது.இளங்குற்ற நடத்தைக்கான காரணங்களும், விளைவுகளும் ஆய்வினை மேற்கொள்ள அச்சுவேலி நன்னடத்தை பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. சான்றுபெற்ற பாடசாலையானது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் போன்ற எல்லா பிரதேசங்களிலும் உள்ள தமிழ் சிறுவர்களை மீள்-சமூகமயமாக்கம் செய்யவும் மற்றும் இவர்களுக்கு தொழில் பயிற்சிகளையும் வழங்கும் இடமாகவும் காணப்படுகின்றது.

**7.2. ஆய்வு வடிவம்**

இளம் குற்ற நடத்தைக்கான காரணங்களும், விளைவுகளும் என்ற ஆய்வில் பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு நுட்பங்களை இணைத்து கலப்பு முறையிலான (Mixed Method) ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**7.3. மாதிரி எடுப்பு**

இவ்வாய்விற்காக நோக்கம் கருதிய மாதிரி எடுத்தல் (Purposive Sampling) முறையினூடாக ஆய்வுக்குடித்தொகை அனைத்தும் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஆய்விற்காக 20 சிறுவர்கள், 02 பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் மற்றும் 01 பெற்றோர் ஆய்விற்காக உற்படுத்தப்பட்டுள்ளனர்.

- உள்ளீர்த்தல்: இளங்குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்பட்ட சிறார்களும், சான்று பெற்ற பாடசாலை அதிபர் மற்றும் ஊழியர்களும் ஆய்விற்காக உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.
- தவிர்த்தல்: கடுமையான நோய்நிலையை உடைய சிறார்களும், உள ரீதியிலான பாதிக்கப்பட்ட சிறார்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தின் சிறப்பு கவனிப்பின் கீழ் உள்ள அதிக குற்றங்களை புரிந்த சிறார்களும் ஆய்விலிருந்து தவீர்க்கப்பட்டுள்ளனர்.

**7.4. தரவு சேகரிப்பு கருவிகள்**

ஆய்விற்காக அரைக்கட்டமைக்கப்பட்ட நேர்காணலை அடிப்படையாக கொண்ட வினாகொத்து, விடய ஆய்வு, அவதானம் ஆகியவற்றினூடாக முதலாம்நிலை தரவுகளும் நூல்கள், ஆய்விதழ், ஆய்வறிக்கை, பத்திரிக்கை ஆகியவற்றினூடாக இரண்டாம் நிலை தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன.

**7.5. தரவு பகுப்பாய்வு**

நேர்காணலை அடிப்படையாக கொண்ட வினாகொத்தின் ஊடாக பெற்று கொள்ளப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவபர தொகுப்பு[3] மென்பொதியினுடாகவும், பண்புசார் கருவிகளின் ஊடாக பெற்றுக்கொள்ளபட்ட தரவுகளை கருப்பொருள் பகுப்பாய்வு (Thematic Analysis) ஊடாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.


**8. கலந்துரையாடலும் முடிவுகளும்**

இளங்குற்ற நடத்தைக்கான சமூக குடித்தொகை காரணிகள் மற்றும் விளைவுகள் எனும் இவ் ஆய்வானது இளங்குற்ற நடத்தையாளர்களுக்கான மீள் சமூமயமாக்கலை மேற்க்கொள்ளும் அச்சுவெலி சான்று பெற்ற பாடசாலையை அடிப்படையாக கொண்டு ஆய்வானது முன்னெடுக்கபட்டுள்ளதுடன் இளங்குற்ற நடத்தையாளர்களாக அடையாளம் காணப்பட்டு மீள்சமூகமயமாக்கல் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறுவர்களை மையமாக கொண்டு பண்பு மற்றும் கணியம் சார் தரவுகள் சேகரிக்கப்பட்ட கலப்பு முறையிலமைந்த ஆய்வாக அமைந்துள்ளது.

[3] Statistical Package for Social Sciences-SPSS

**8.1. தனிநபர் சார் காரணிகள்**

இளங்குற்றவாளிகளாக அடையாளப்படுத்தபட்ட சிறுவர்கள் குற்ற செயற்பாடுகளில் ஈடுபட தனிநபர் சார்ந்த காரணிகளும் தாக்கம் செலுத்தியுள்ளன. அச்சுவேலி சான்று பெற்ற பாடசாலையில் அனுமதிக்கப்பட்டு மீள்சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறுவர்கள் மேற்க்கொண்ட குற்றநடத்தையின் வகையினை வரைபு 01 இல் காணலாம். இதனடிப்படையில் 55% ஆன சிறுவர்கள் மது, போதைப்பொருள் பாவணையுடன் தொடர்புடைய குற்றங்களை புரிந்தவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.




**வரைபு 01 இளங்குற்ற நடத்தையின் வகை**

இவர்களுடன் பாடசாலையிலிருந்து தப்பி ஓடியவர்கள் மற்றும் பாடசாலை இடைவிலகல், களவெடுத்தல் மற்றம் நன்நடத்தையை வெளிப்படுத்தமை ஆகிய குற்றங்களை புரிந்த நபர்களும் சான்று பெற்ற பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் குற்ற நடத்தைகளுக்கு தனிநபர் சார்ந்த ரீதியில் உடல், உள ரீதியிலான காரணிகளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன. Baba & Ahmad (2007) தனிநபர் சார்ந்த பண்புகள் என்கின்ற போது சுய மரியாதை. சமாளிக்கும் திறன், மதம், ஆளுமை பண்பு கூறுகள், குறைபட்ச கல்வி அடைவு, பாடசாலையில் தோல்வி, எழுத்தறிவு வீத குறைவு ஆகியவை இளங்குற்ற நடத்தையில் தனிநபர் சார்ந்த காரணிகளாக காணப்படுகின்றன என்கின்றனர். Chandr Jaunky et al (2017), இளங்குற்ற நடத்தைக்கும் தனிநபர் சார்ந்த ஆளுமை (Personality) காரணிகளும் குற்ற நடத்தையில் ஈடுபட காரணம் எனவும் ஆளுமையுடன் குற்றத்தின் வகை தொடர்புபடுவதனையும் குறிப்பிட்டுள்ளார். எனினும் ஆய்வின் படி குற்ற நடத்தைகளில் ஈடுபட்டு தற்போது மீள்சமூகமயமாக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறார்களின் நடத்தைக்கும் அவர்களுடைய குற்ற நடத்தைக்கும் இடையில் தொடர்புகள் குறைவாக உள்ளமை ஆய்வினூடாக கண்டறியப்பட்டது.

இளங்குற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கு சிறுவர்களை தூண்டும் காரணிகளில் குடும்பம், நண்பர்கள் மற்றும் சுயமான முடிவு என்ற ரீதியில் தூண்டும் காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன. ஆய்வின் போது இளங்குற்ற நடத்தையில் ஈடுபட தூண்டிய காரணிகளில் 50%த்தினர் தங்களுடைய நண்பர்களினுடைய அழுத்தமே காரணம் என்பதனை வெளிப்படுத்தியுள்ளனர்(வினாக்கொத்து). இதனூடாக நண்பர்களினுடைய தவறான வழிநடத்தல்களும் குற்ற நடத்தைக்கான காரணியாக அமைந்துள்ளமையை இனங்காணலாம். Omogho Esiri (2016) குறிப்பிடுவதன் படி பெற்றோர் பிள்ளைகளுக்கு மன நிறைவை ஏற்படுத்த தவறும்போது பிள்ளைகளிடத்தே மனவெழுச்சி சார் பிரச்சினைகள் ஏற்படுவதுடன் அது தவறான நடத்தையுடைய நண்பர் குழாத்துடன் சேர்வதற்கன சூழ்நிலை ஏற்படுத்தப்படுவதுடன் நண்பர்களினால் வழங்கப்படும் அழுத்தம் உளவியல் ரீதியாக சுயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற விடயத்தினை முன்வைத்துள்ளார்.

இளங்குற்றநடத்தைக்கான அழுத்தத்தினை பிரயோகிக்கும் நண்பர்கள் மது, போதைப்பொருள் பாவணைக்கான வழிநடத்தலையும் மேற்க்கொள்ளுகின்றனர். ஆய்வின் போது படி 45%மான

சிறார்கள் நண்பர்களுடன் இணைந்து போதைப்பொருள் நுகர்வில் ஈடுபடுகின்றமை அடையாப்படுத்தப்பட்டுள்ளது (வினாக்கொத்து). அத்துடன் “ஸ்கூல்ல இருக்கப்ப என்னோட பழகுற நண்பர்கள்… அப்படி போகேகுல்ல தான் எனக்கும் போதைப்பொருள் பாவிக்க ஆரம்பிச்சனான். எனக்கு ஆரம்பத்தில ஒன்டுமே தெரியாது. நண்பர்களோட சேர்ந்துதான் முதல்ல ஆரம்பிச்சன். விளையாட்டா ஆரம்பிச்சது பின்னர் அதிகமாக எடுக்க ஆரம்பிச்சிட்டன்…”, “எனக்கு முதல் முதலா நண்பர்கள் தான் பழக்கினாங்க, ஆரம்பத்தில பயமாதன் கிடந்தது, அப்பறம் பழகிட்டு,.. கடைசியா நண்பர்களோட இருந்துதான் அடிச்சு மாட்டுபட்டுடன்…”(விடய ஆய்வு) போன்றவற்றின் மூலமாக நண்பர்கள் போதைப்பொருள் பாவணையை தூண்டுவதுடன் போதைப்பொருள் சார்ந்த குற்றத்திற்கும் காரணமாகின்றன.

அச்சுவெலி சான்று பெற்ற பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டு மீள்சமூகமயமாக்கல் செயன்முறையில் ஈடுபடும் சிறுவர்களிடம் சாதகமான மாற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன(அவதானம்). குறிப்பாக பாடசாலையிலிருந்து இடைவிலகியோர் மற்றும் கல்வியை புறக்கணிக்கும் சிறுவர்கள் மத்தியில் கல்வியை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வெளிப்பட்டுள்ளது. Niriella (2011) குறிப்பிடுவதனை போல சான்றுபெற்ற பாடசாலைகளில் வழங்கப்படும் சிகிச்சை மற்றும் வழிப்படுத்தல் போன்றவை இளங்குற்ற நடத்தையாளர்களின் நடத்தையினை மாற்றியமைக்கும் என்பதனை குறிப்பிட்டுள்ளார். இவருடைய கருத்தின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சிறுவர்களிடமும் நடத்தை மாற்றத்தினை அவதானிக்க முடிந்தது. எனினும் போதைப்பொருள் சார்ந்த குற்றங்களில் ஈடுபட்ட சிறாரகளிடம் நடத்தைசார் மாற்றங்கள் ஆய்வின் போது இனங்காணப்படவில்லை என்பதுடன் குறித்த குற்றத்தில் ஈடுபட்ட சிறுவர்கள் தங்களை மாற்றியமைத்துக்கொள்ள முயற்சி செய்வதும் குறைவாக உள்ளமையையும் அறியக்கூடியதாக உள்ளது.

**8.2. சமூகக்குடித்தொகை காரணிகள்**

**8.2.1. குடும்ப காரணிகள்**

இளங்குற்ற நடத்தையில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் குடும்பம் சார்ந்த காரணிகளின் செல்வாக்கும் முக்கியமாகும். ஆய்வின் படி இளங்குற்ற நடத்தைக்கான குடும்ப காரணிகளாக பெற்றோர்களின் அதிக கட்டுப்பாடு, குடும்பத்தவரின் மது, போதைப்பொருள் பாவணை மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் சிறுவர்கள் மீது வைத்துள்ள அன்பு, கரிசனை போன்ற விடயங்கள் செல்வாக்கு செலுத்துகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. Baba, Ahmad (2007) கருத்தின் படி குடும்ப வருமானம், சமூக நிலை/அந்தஸ்து, குடும்ப உறவின் தரம், குடும்ப செயற்பாடு, பெற்றோரியம், பெற்றோரின் மேற்பார்வை, குடும்ப தொடர்பாடல் தன்மை, குடும்ப அமைப்பு மற்றும் குடும்ப அளவு போன்ற காரணிகள் செல்வாக்கு செலுத்தும் என்பதனை முன்வைத்துள்ளனார். இவருடைய கருத்தின் அடிப்படையில் ஆய்விலும் குடும்ப ரீதியிலான உறவுகளின் தொடர்பு, தவறான நடத்தைகள் போன்றனவும் இளங்குற்ற நடத்தைக்கான காரணமாக கண்டறியப்பட்டுள்ளன.

குடும்ப பொருளாதார சூழ்நிலையும் இளங்குற்ற நடத்தைக்கான காரணமாக அமையும் என Birkenhead, Chowdhury & Fahim மற்றும் Niriella குறிப்பிடுகின்றனர். எனினும் ஆய்வின் போது இளங்குற்ற நடத்தையாளர்களாக அடையாளப்படுத்தப்பட்ட சிறுவர்களிடம் குடும்ப ரீதியிலான பொருளாதார நிலைமைக்கும் குற்ற நடத்தைக்குமான தொடர்பு குறைவாகவே இனங்காணப்படுள்ளது. குறிப்பாக குடும்ப வறுமைக்கும் குற்ற நடத்தைக்குமான தொடர்பு

இச்சிறுவர்களிடம் இனங்காணப்படவில்லை. அத்துடன் குடும்ப ரீதியிலான குறைவான பொருளாதார நிலைமை காணப்பட்டாலும் சிறுவர்கள் தங்களுடைய குடும்ப சூழ்நிலைக்காக குற்ற நடத்தைகளில் ஈடுபடவில்லை என்பதனையும் சமூக அந்தஸ்து நிலைமையும் குற்ற நடத்தையில் தாக்கம் செலுத்தவில்லை என்பதும் இனங்காணப்பட்டுள்ளது. இலங்கையை பொருத்த வரையில் வறுமையான குடும்பங்கள் மற்றும் பின்தங்கிய பிரதேச சிறார்களே அதிகளவில் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என Niriella குறிப்பிட்டாலும் இச்சிறுவர்கள் தங்களுடைய தேவைகளை தாங்களாகவே அடைந்தக்கொள்வதாற்காகவே குற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்பதனையும் தங்களுடைய குடும்ப நிலைமையை சீரமைக்க குடும்ப பொருளாதாரத்தில் பங்களிப்பு செய்வதில்லை என்ற விடயத்தினையும் அறிந்துக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

குடும்ப உறுப்பினர்களின் மது, போதைப்பொருள் பாவணையின் தாக்கம் சிறுவர்கள் மத்தியில் மது, போதைப்பொருள் நுகர்விற்கு காரணமாக அமைந்துள்ளன. ஆய்வின் மூலமாக தங்களுடைய தந்தை அல்லது சகோதரர்களினுடைய மது, போதைப்பொருள் நடத்தையை அவதானிக்கும் சிறுவர்கள் மத்தியில் போதைப்பொருளை ஒரு தடவையேனும் நுகர வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதனையும் அவ்வெண்ணமே இளங்குற்ற நடத்தையாளராக மாற்றியமைப்பதற்கான ஆரம்ப தோற்றுவாயாகவும் அமைந்துள்ளன. ஆடைநள நவ யட மற்றும் ளேைநடடய போன்றோரினுடைய ஆய்வுகளில் இளங்குற்ற நடத்தைக்கான பிரதான காரணமாக தங்களுடைய குடும்ப அங்கத்தவரின் மது, போதைப்பொருள் பாவணையின் நடத்தையை அவதானிக்கும் சிறுவர்கள் தங்களையும் வயதுவந்த நபர்களாக நினைத்து கொண்டு மது, போதைப்பொருள் பாவணைக்கு தங்களை பழக்கப்படுத்திக்கொள்ள முயற்சி செய்கின்றனர் என்பதனையும் தங்களுடைய போதைப்பொருள் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கான திருட்டு, வழிப்பறி போன்ற குற்றங்களில் ஈடுபடுவதனையும் சுட்டிக்காட்டியுள்ளனர். சிறுவர்களை போதைப்பொருள் பாவணையிலிருந்து மீட்டு எடுக்க வேண்டிய தேவை குடும்ப அங்கத்தவர்களிடம் காணப்பட வேண்டிய நிலையில் குடும்ப அங்கத்தவர்களும் இவற்றிற்கு காரணமாக அமைந்துள்ளமையானது ஆரம்ப சமூகமயமாக்கல் செயன்முறையில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.


**8.2.2. பாடசாலை சார் காரணிகள்**

இரண்டாம்நிலை சமூகமயமாக்கல் முகவராக தொழிற்படும் பாடசாலை தன்னுடைய சமூகமயமாக்கல் செயன்முறையில் ஏற்படுகின்ற தடைகளும் சிறுவர்களினுடைய நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆய்வில் சிறுவர்களுக்கும் தங்கள் கற்ற பாடசாலை ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள முரண்பாடான சூழல் சிறுவர்களின் நடத்தையில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் கல்வி மீதான வெறுப்பினையும் பாடசாலையிலிருந்து இடைவிலகல் மற்றும் தப்பியோடல் ஆகியவற்றிற்கு வழிவகுப்பதாக அமைந்துள்ளது. அந்த வகையில் பாடசாலை சார்ந்த காரணிகளான அதிகபடியான கட்டுப்படுத்தல், அதிகபடியான தண்டனைகள், வகுப்பறையிலிருந்து வெளியேற்றல் மற்றும் புறக்கணிப்புகள் என்பன காரணமாக அமைந்துள்ளன. Berger & Gregory (2009) குறிப்பிடுவதை போல பாடசாலை குற்றநடத்தை (School Deliquesce) பாடசாலையில் வர்க்கம் சார்ந்த அடுக்கமைவுகள், அடையாளப்படுத்தல் (Labeling) போன்றன இளங்குற்ற நடத்தைக்கான ஆரம்ப நிலையாக உள்ளன என்பதனையும் கல்வி அடைவுகளை பெற தவறியமை, கல்வி மீதான வெறுப்பு, பாடசாலை மிதான வெறுப்பு, அதிகமாக கட்டுப்பாடுகள்

விதிக்கப்படுவதும், பாரபட்சம் காட்டப்படுவதும் குற்ற நடத்தைக்கு காரணமாக அமையலாம் என்பதனை முன்வைத்துள்ளார். பாடசாலையிலிருந்து இடைவிலகிய சிறுவர்களிடம் தாங்களுடைய பாடசாலை ஆசிரியர்கள் தங்களுக்கு மாத்திரம் அதிகளவான தண்டனைகளை வழங்குவதாகவும் தங்களை கல்வி நடவடிக்கைகளில் இருந்து புறக்கணிப்பதாகவும் தெரிவித்தமையானது சமூக அடுக்கமைவின் மறைமுக தோற்றப்பாட்டை வெளிப்படுத்துவதயையும் காணலாம். குறிப்பாக சிறுவர்களுடைய சமூக நிலையை கொண்டு அவர்களை புறக்கணிக்கும் போது அவர்களுக்கு ஏற்படும் கல்வி மீதான வெறுப்பும் பாடசாலை இடைவிலகலில் தாக்கம் செலுத்துகின்றது. குறிப்பாக ''சில ஆசிரியர்கள் என்னைய பார்த்தாலே ஏறிஞ்சு விழுவாங்க. அவங்க ஏன் அப்படி செய்றங்கனு எனக்கு தெரியல. ஸ்கூல்ல Teacher அப்படி இருக்கவும் எனக்கு ஸ்கூல் போகவும் விருப்பமில்ல…'',''உன்ன பார்த்தா உண்ட அம்மா அப்பாட வளர்ப்பு தெரியிது எண்டு சொன்னவர். அப்போ அம்மாவ வளர்ப்பு சரிஇல்ல எண்டு அம்மாவ பேசினதால எனக்கு கோபம் வந்துட்டு அதிபர நான் அடிக்க போய்ட்டன்…'' (விடய ஆய்வு) போன்றவற்றின் மூலமாகவும் பாடசாலைசார்ந்த காரணங்களும் இளங்குற்ற நடத்தைக்கு காரணமாக உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

### 8.2.3. சமூகம் சார் காரணிகள்

இளங்குற்ற நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணிகளில் சமூகம் சார் காரணிகளும் முக்கியமாகும். ஆய்வின் படி 70%மான சிறுவர்கள்(வினாக்கொத்து) கிராமப்புற பிரதேசத்தினை சேர்ந்தவர்களாக உள்ளதுடன் இச்சிறுவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் அதிகளவில் மேற்க்கொள்ளப்படும் தொழில்களாக கூலித்தொழிலும், விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகியவை அதிகமாக மேற்க்கொள்ளப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. குற்ற நடத்தைக்கும் தொழிலுக்கும் இடையிலான உறவினை ஆய்வு செய்த Edumund குறிப்பிடும் போது வர்க்க அடிப்படையில் குற்ற நடத்தை ஏற்படுவதாகவும் குறிப்பாக கீழ் வர்க்க தொழிற்துறையிலேயே அதிகளவில் குற்றங்கள் இடம் பெறுகின்றது என்பதனையும் முன்வைத்துள்ளார். ஆய்வின் போது சிறுவர்களின் பிரதேச தொழில்களுக்கும் குற்ற நடத்தைக்குமான தொடர்பு வெளிப்படையாக தெரியாவிடினும் நிறுவனம் சார்ந்த ஆய்வாக அமைவதால் முழுமையான முடிவினை பெற்றுக்கொள்ள முடியவில்லை.




**வரைபு 2 அதிகளவில் மேற்க்கொள்ளப்படும் தொழில்கள்**

சமூக ரீதியிலான காரணிகளில் மற்றுமொரு காரணியாக ஊடகத்தினுடைய தாக்கத்தினையும் குறிப்பிடலாம். சிறுவர்கள் ஊடகங்களில் வருகின்ற காட்சிகளால் கவரப்பட்டு குறித்த காட்சிகளில் வருகின்ற மது, போதைப்பொருள் பாவணை போன்றனவற்றை செய்து பார்க்க முனைகின்ற போது தவறான வழியில் சமூகமயப்படுத்தப்படுகின்றனர். Manjur (2020), குறிப்பிடுவதை போல சினிமாவினுடைய தாக்கம், தொலைக்காட்சி நாடகங்கள் என்பவை சில நேரங்களில் சிறுவர்களை சமூகத்தில் எதிர்நிலையாக தொழிற்பட வைப்பதற்கு

பயிற்சியளிக்கின்றது. குறிப்பாக ''படத்துல போரதாலாம் நான் பாத்துதான் அடிச்சன். அஞ்ஜான் படத்துல அடிப்பாங்கள் அதுதான் பார்த்தன். அந்த வில்லன் கஞ்சா அடிக்கிறது. அந்த படத்த பாத்ததால அது போல குடிக்கனும்னு ஆசையா இருந்தது…'','' எனக்கு படங்கள்ல வார மாதிரி சிகரட் அடிக்க ஆசையா இருந்துச்சு. ஒருநாள் அப்பாட்ட இருந்த பீடிய எடுத்து ஹிரோ மாதிரி அடிச்சிபார்தேன்…''(விடய ஆய்வு) போன்ற கருத்துக்களின் மூலமாக கண்டறிந்துக்கொள்ளலாம்.Mojares et al குறிப்பிடுவதை போல சமூக ஊடகங்களின் தாக்கமும் இளங்குற்ற நடத்தைக்கு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதும் ஆய்வினூடாக இனங்காணப்பட்டுள்ளது. எனினும் ஆழதயசநள நவ யட குறிப்பிடுவதை போல வர்க்க அடிப்படையிலான குற்றங்களுக்கும் ஊடகங்களுக்கும் இடையிலான தொடர்பு ஆய்வின் போது இனங்காணப்படவில்லை என்பதுடன் ஊடகங்களின் மூலம் கவரப்பட்டு குற்றங்களில் ஈடுபட்ட சிறுவர்கள் அனைத்து சமூகத்தையும் சேர்ந்தவர்களாக உள்ளமையும் அறிந்துக்கொள்ளக்கூடியதாக உள்ளது. சமூகத்தில் அதிகபடியான கட்டுப்பாடுகளை எதிர்ப்பினை வெளியிடுவதற்கான திறனையும் ஆற்றலையும் வளர்க்கும் ஊடகங்கள் தங்களுடைய வியாபார சந்தை நோக்கங்களுக்காக மது மற்றும் போதைப்பொருட்களை ஊக்கப்படுத்தலானது சிறுவர்களினுடைய எதிர்காலத்தினை பாதிப்பதாக அமைந்துள்ளது.

### 8.3. இளங்குற்ற நடத்தையால் ஏற்பட்ட விளைவுகள்

இளங்குற்ற நடத்தையினால் ஏற்படும் விளைவுகள் என சிறுவர்களின் உடல், உள ஆரோக்கிய நிலையில் ஏற்படும் தாக்கம், உணர்வு மற்றும் நடத்தையில் ஏற்படும் மாற்றம், நண்பர்கள் மற்றும் பாடசாலை ஆகியவற்றில் குடும்பங்களின் உறுப்பினர்களிடையேயான முரண்பாடுகள் மற்றும் புறந்தள்ளப்படல் மற்றும் சமூக ரீதியான எல்லைப்படுத்தப்படல், அடையாளப்படுத்தல் போன்றவை இளங்குற்ற நடத்தையால் ஏற்பட்ட விளைவுகளாக ஆய்வினூடாக இனங்காணப்பட்டுள்ளன. Chingtham மற்றும் Khurshid & Urooj போன்றோர் குறிப்பிடுவதைப்போல இளங்குற்ற நடத்தையின் விளைவுகள் தனிமனித மற்றும் சமூக கட்டமைப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் போன்ற கருத்துக்களின் அடிப்படையில் ஆய்வின் போது இளங்குற்ற நடத்தையினால் சமூக கட்டமைப்பில் சமூக நிறுவனங்களின் தொழிற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக குடும்பங்களை பொருத்த வரையில் பெற்றோர் தங்களுடைய பிள்ளை குற்ற செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதால் மீண்டும் சமூகத்தில் ஒன்றிணைப்பதில் குடும்பத்திற்கு ஏற்பட போகும் அடையாளம் தொடர்பிலான அச்சத்தினை வெளிப்படுத்துவது ஆய்வினூடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளிலும் இளங்குற்றவாளிகளை மீள அனுமதித்து ஏனைய சிறுவர்களுடன் ஒன்றிணைத்து செயற்பட பாடசாலைகளும் விருப்பம் தெரிவிக்கமை முக்கிய விடயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வின் போது இளங்குற்ற நடத்தையில் ஈடுபட்ட சில சிறுவர்களிடம் தங்களுடைய குற்ற நடத்தையிலிருந்து வெளிவருவதற்கு கடினமான நிலைமையை எதிர்நோக்குவதனையும் சில சிறுவர்கள் தங்களுக்கு வெளிவருவதற்கு விருப்பமின்மையையும் வெளிப்படுத்தினர் (நேர்காணல்;விடய ஆய்வு). Chandr Jaunky et al தன்னுடைய ஆய்வில் இளங்குற்ற நடத்தைக்கும் தனிநபர் சார்ந்த ஆளுமை காரணிகளை வரையருக்கும் போது சிறுவர்கள் உள ரீதியான சமூகமயப்படுத்தலில் தவறான சமூகமயப்படுத்தலுக்கு உள்ளாகும் போது அச்சிறுவனை மீட்டு எடுப்பது கடினமான விடயமாக அமைவதுடன் மீட்டு எடுப்பதற்கு சிறுவனின் முழுமையான ஒத்துழைப்பும் அவசியம் என்பதனை முன்வைத்துள்ளார். ஆய்விலும் சிறுவர்கள் தங்களுடைய குற்றங்களை ஒப்புக்கொண்டாலும் தங்களுடைய நடத்தையில் மாற்றத்தினை

ஏற்படுத்திக்கொள்ள விருப்பம் தெரிவிக்காமை இனங்காணப்பட்டுள்ளது. குறிப்பாக போதைப்பொருள் சார்ந்த குற்றங்களில் ஈடுபட்ட சிறார்கள் மத்தியில் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றமையும் அறிந்துக்கொள்ளலாம்.

### 8.4. மீள் சமூமயமாக்கலில் ஏற்பட்ட தாக்கங்கள்

அச்சுவெலி சான்று பெற்ற பாடசாலையின் முக்கிய செயற்பாடாக மீள்சமூகமயமாக்கல் காணப்படுகின்றது. அந்த வகையில் சான்று பெற்ற பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தங்களுடைய குற்ற நடவடிக்கைகளிலிருந்து வெளிவருவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுட்டுள்ளமையை கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக பாடசாலைக்கல்வி வழங்கல், தொழிற்பயிற்சி மற்றும் கணிணி பயிற்சி போன்றவை வழங்கப்படுவதுடன் பாடசாலை இடைவிலகிய சிறுவர்களும் தங்களுடைய கல்வியை தொடர்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கபட்டுள்ளது. ஆய்வின் போது பாடசாலை இடைவிலகலிலும் களவு எடுத்தலினால் கைது செய்யப்பட்ட சிறுவர்களும் தங்களுடைய குற்றவுணர்வை வெளிப்படுத்தியதுடன் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தெரிவித்தனர். இதுவரையிலும் குறிக்கோள்கள் இல்லாமல் பாடசாலை கல்வியை வெறுப்புடன் தொடர்ந்து வந்த இச்சிறுவர்களிடம் தாங்களும் சமூகத்தில் இளங்குற்றவாளியாக அடையாளப்படுத்தப்பட்டு பல தடைகளை சந்தித்தமையால் தன்னைபோல குற்ற நடத்தைகளில் ஈடுபடும் சிறுவர்களுக்கான சிறந்த ஓர் முன்னுதாரணமாக மாற்றமடைய வேண்டும் என்ற இலட்சியத்தினை உருவாக்கி கொண்டுள்ள சிறுவர்களையும் ஆய்வின் போது இனங்காணக்கூடியதாக அமைந்தது.

சில சிறுவர்கள் மத்தியில் மாத்திரம் குற்ற நடத்தையில் மாற்றங்கள் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளனதுடன் அவ்வாறான சிறுவர்கள் சான்று பெற்ற பாடசாலைக்கு மீண்டும் மீண்டும் அழைத்துவரப்படும் நிலைமையும் ஏற்பட்டுள்ளமையும் அறியமுடிகின்றது(அவதானம்). இவ்வாறான நிலைமை இச்சிறுவர்களின் எதிர்காலத்தினை நிலையற்றதாக மாற்றுவதுடன் பெரியளவிலான குற்ற செயல்களிலும் ஈடுபடுவதற்கான சூழ்நிலையையும் ஏற்ப்படுத்தலாம். எனினும் இச்சிறுவர்களுக்கு சான்று பெற்ற பாடசாலையில் மீள்சமூகமயமாக்கலில் புதிய அனுகுமுறைகள் தேவை என்பதனையும் ஆற்றுப்படுத்தல் மற்றும் சிகிச்சை செயன்முறைகளை இவ்வாறான சிறுவர்களிடம் ஏற்படுத்தலாம் என்பதையும் ஆய்வினூடாக அறிந்துக்கொள்ள கூடியதாக அமைந்துள்ளது.

### 9. முடிவுரை

இளங்குற்ற நடத்தையில் தாக்கம் செலுத்தும் சமூக குடித்தொகை மற்றும் தனிநபர் சார்ந்த காரணகளையும் விளைவுகயையும் இவ் ஆய்வானது அச்சுவெலி சான்று பெற்ற பாடசாலையை அடிப்படையாக கொண்டு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக இலங்கை முழுவதும் 18 வயதிற்குற்பட்ட குற்ற செயற்பாடுகளில் ஈடுபட்ட சிறுவர்கள் மத்தியில் குற்ற நடத்தைக்கான காரணங்களினையும் குற்ற நடத்தையினால் ஏற்பட்ட விளைவுகளையும் குறித்த சிறுவர்கள் சான்று பெற்ற பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் இவ்வாய்வினூடாக அறிந்துக்கொள்ளலாம்.

சிறுவர்களின் மத்தியில் சமூகமயமாக்கல் செயன்முறை அவர்களுடைய வாழ்நாள் நீடித்த ஆளுமையையும் நடத்தையையும் தீர்மானிப்பதாக அமையும். சிறுவர்களுக்கான ஆரம்ப மற்றும் இடைநிலை சமூகமயமாக்கல் செயன்முறையில் ஏற்படுகின்ற தடைகளும் புறக்கணிப்புகளும் தவறான நடத்தைகளுக்கு காரணமாக அமைந்துள்ளன. குடும்பம் மற்றும் பாடசாலை ஆகிய

இரு சமூக நிறுவனங்களே சிறுவர்களினுடைய நடத்தையை தீர்மானிக்கும் முக்கிய பொறுப்பினை ஏற்றுள்ளன. குடும்பத்தில் உறுப்பினர்கள் மத்தியிலான மது, போதைப்பொருள் பாவணை, பிள்ளைகள் மீதான அக்கறை செலுத்தாமை, அதிகபடியான கட்டுப்பாடுகள் மற்றும் அதிகபடியான சுதந்திரம் போன்ற நிலைமைகளில் சிறுவர்கள் இலகுவாக நடத்தை மாற்றத்தினை எதிர்க்கொள்ளுகின்றனர். பாடசாலையிலும் சிறுவர்களினுடைய பிரதேசம் மற்றும் சமூக அடுக்கமைவு சார்ந்த காரணிகளின் செல்வாக்கு, ஆசிரியர்களுடனான முரண்பாடு கல்வி மீதான வெறுப்பினை ஏற்படுத்துவதுடன் சமூகத்திலுள்ளவர்கள் மீதான வெறுப்பினையும் கவனத்தினை திசைதிருப்புவதுடன் குற்றங்களிள் இலகுவில் ஈர்க்கப்படுவதற்கும் வாய்ப்பாக அமைகின்றன. சில நேரங்களில் குற்றத்தில் ஈடுபடாத சிறுவர்களும் தவறான புரிதல் காரணமாக இளங்குற்ற நடத்தையில் ஈடுப்பட்டவர் என்ற அடையாளம் எதிர்காலத்தில் உண்மையாகவே குற்றவாளியாக மாற்றமடைவதற்கான சூழலும் தற்கால சமூகத்தின் போக்கினூடாக ஏற்படலாம்.

சிறந்த குடும்பமும் பாடசாலையும் சான்று பெற்ற பாடசாலைக்கான தேவையை குறைத்துவிடும். ஆனால் தற்காலத்தில் சமூகத்தில் மாறிவருகின்ற சமூக பொருண்மைகள் மற்றும் நவீனமயமாக்கல் தனிமனித சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. புதியனவற்றை அடைந்துக்கொள்வதற்கான தேவை அதிகரித்துள்ளது. இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக இருந்தாலும் தற்காலத்தில் அதிகரித்து வருகின்ற சமூக, பொருளாதர மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை சமூக பிரச்சினைக்கான களத்தினை உருவக்கியுள்ளன. இவ்வாறான நிலையில் சிறுவர்களும் சமூகத்தினுடைய வேகமாக நகர்வுக்கு ஏற்றவகையில் தங்களை தயார்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. குற்ற நடத்தையில் ஈடுபடுவதால் கிடைக்கும் மகிழ்ச்சியை விட சமூகத்தினுடைய நியதிகளுக்கு கட்டுப்பட்டு விழுமியங்களை மதித்து நடக்கின்ற பழக்கம் அமைதியையும் சமாதானத்தினையும் ஏற்படுத்தும். இளங்குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சிறார்களையும் நல்வழிப்படுத்தும் முயற்சியில் சமூகத்திலிருக்கும் அனைவரும் முன்வர வேண்டும்.

**பரிந்துரைகள்**

- மீள சமூகத்துடன் ஒருங்கினைக்கும் செயற்பாடுகளை அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து முன்னெடுத்தல்.
- கல்வி கற்பதற்கான அல்லது ஆர்வமான தொழில்வான்மையினை விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பளித்தல்.
- சிறுவர்களிடத்தில் சுய ஒழுக்க பண்புகளை சிறுவர் உளவியல் எண்ணக்கருக்களுக்கு அமைய வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- சிறுவர் சீர்திருத்த பள்ளியில் சிறுவர்களை நடத்துவதற்கென விசேடமாக பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- குற்றம் செய்யும் பிள்ளைகளின் குற்றம் செய்வதற்கான உண்மையான காரணத்தை கண்டறிந்து அதை தனிப்பதற்கான கொள்கை ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- பெற்றோர்களினை பார்ப்பதற்கான அனுமதியினை இரண்டு நாளைக்கு ஒரு தடைவை வழங்குதல் வேண்டும். அவர்கள் தங்களுடைய பெற்றோரை பார்ப்பதற்காக மீண்டும் இங்கிருந்து செல்லும் செயற்பாடுகள் அதிகமாக இருப்பதால் இந்த விடயத்தினை நடைமுறை சாத்தியமான வகையில் நடைமுறைப்படுத்தல்.

- சிறுவர்களுக்கு பெற்றோர்களை இழந்த மற்றும் பெற்றோர்களின் அரவணைப்பு இல்லாத குழந்தைகளுக்கான உளவியல் கருத்தரங்குகளை வளர்த்தல்.
- கிராம மட்டங்களிலிருந்து சிறுவர் குற்றம் தொடர்பான விளிப்புணர்வுகளை செய்தல்.
- சமூகத்தில் இளம் குற்ற நடத்தை தூண்டும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளினை கொண்டுவருதல்.
- தொலைக்காட்சி மற்றும் ஏனைய சமூக ஊடக பாவனைகளினை வரும் குற்றநடத்தைகள் தொடர்பான காட்சிகளினை தடைசெய்தல்.

**Reference**

Baba, M., & Ahmad, S. (2007). Juvenile Delinquency: Definitions, Trend and Governmental Efforts to Curb the Problem. Round Table Discussion on Youth - Ministry of Youth Culture and Sport. Retrieved from https://www.researchgate.net/publication/301543703_Juvenile_Delinquency_Definitions_Trend_And_Governmental_Efforts_To_Curb_The_Problem

Berger, R. J., & Gregory, P. D. (2009). Juvenile Delinquency and Justice: Sociological Perspectives. Denvor, USA: Lynne Rienner Pub.

Chandr Jaunky, V., Ramesh, V., & Gungea, M. (2017). Personality Traits and Juvenile Delinquency: A critical analysis. *International Journal of Conceptions on Management and Social Sciences*, *5*(1), 42–46. Retrieved from https://www.researchgate.net/publication/314151962_Personality_Traits_and_Juvenile_Delinquency_A_critical_analysis

Chingtham, T. (2015). Causes of juvenile delinquency in higher secondary school students. *IOSR Journal of Research and Method in Education*, 5(5), 20-24. Available at: 10.9790/738805522024.

Chowdhury, I. A., Khan, M. M., & Uddin, I. (2012). Causes and consequences of Juvenile delinquency in Bangladesh: A sociological analysis. *International Journal of Social Science Tomorrow*, 4(1), 1-11.

Chowdhury, M. A. A., Fahim, M. H. K. (2019). An appraisal of causes and consequences of Juvenile delinquency in Bangladesh: Search for a durable solution - Bangladesh Institute of Legal Development (BILD) *Law Journal*, 4(1), 60-80.

Delcea, C., Fabian, A. M., Radu, C. C., & Dumbrava, D. P. (2019). Juvenile delinquency within the forensic context. *Romanian Journal of Legal Medicine*, *27*(4), 366–372. https://doi.org/10.4323/rjlm.2019.366

Edumund, W.V. (1976). Middle class Juvenile Delinquency. Publication of New York.

Khurshid, F., & Urooj, T. (2012). Causes of juvenile delinquency among teenagers in Pakistani context. *Elixir Online Journal*, 7793. Retrieved from https://www.academia.edu/5693447/Causes_of_juvenile_delinquency_among_teenagers_in_Pakistani_context

Manjur, H. P. (2020). Socio-Economic Cultural and Family Factors Causing Juvenile Delinquency and Its Consequences in Bangladesh: A Look for Way Out. *Asian Journal of Social Sciences and Management Studies*. Vol. 7, No. 2, 89-98. 2020. DOI: 10.20448/journal.500.2020.72.89.98.

Miles, J. N., Kulesza, M., Ewing, B., Shih, R. A., & Tucker, J. S. (2015). Moderated mediation analysis: An illustration using the association of gender with delinquency and mental health. *Journal of Criminal Psychology*, 5(2), 99—123.Available at: 10.1108/JCP-02-2015-0010.

Mojares, R., E., Evangelista, C. J., R., Escalona, R., A., & Ilagan, K., Joseph. (2015). Impact of Social Networking to Juvenile Delinquency. *International Journal of Management Sciences*, *5*(08), 582–586.

Niriella, J. (2011). Rehabilitation and Re-Integration of Juvenile Offenders in Sri Lanka. *US China Law Review*, *8*, 499–509.

Omogho Esiri, M. (2016). The Influence of Peer Pressure on Criminal Behavior. *IOSR Journal of Humanities and Social Science*, *21*(1), 2279. Retrieved from https://www.iosrjournals.org

Patoari, M. M. H. (2020). Causes and effects of child marriage in Bangladesh: A case study at halishahar, Chattogram, Bangladesh. Academic Journal of Interdisciplinary Studies, 9(2), 162-172.Available at: https://doi.org/10.36941/ajis-2020-0034.

Wardle, L., D. (2007). The Fall of Marital Family Stability and the Rise of Juvenile Delinquency. *Journal of Law & Family Studies*, *10*(01)

தமிழினி, ரீ., அஞ்சலிகா குமாரி, ச., அபிராமி ராஜ். (2019). ஐந்து ஆளுமைப் பண்பும் இளங்குற்றவாளிகளும்: அச்சுவேலி சிறுவர் சீர்திருத்த பாடசாலையை அடிப்படையாக கொண்ட ஓர் ஆய்வு. தென்கிழக்கு பல்கலைக்கழகம், *இலங்கை வெளியீடு*. ISBN 978-955-627-189-8.

ரஜீவன், க.(2012) குற்றநடத்தை. அஞ்சலி சுடர்-03.